# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**ஆணை நாள்: 27.02.2025**

**நேரடி விசாரணை: மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர்**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண். SA 1923/F/2023**

திரு. சு.வரதராஜன் .. மனுதாரர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
வட்டார வளர்ச்சி அலுவலகம் .. பொது அதிகார அமைப்பு
கடலூர்
கடலூர் மாவட்டம் - 607 001

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 27.02.2025 அன்று கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.சு.வரதராஜன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012 விதி 7-ன் படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.செ.தமிழ்தாசன், பொது தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், கடலூர், கடலூர் மாவட்டம் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 14.11.2022 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கடலூர் ஒன்றியத்திற்குட்பட்ட கீழ்அழிஞ்சிப்பட்டு கிராம ஊராட்சியில் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் விபரம் மற்றும் அவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட வேலை உத்தரவு மற்றும் பணி துவங்குவதற்கு முன்பும், பணி முடிவடைந்த பின்பும் எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் தொகை வழங்கிய விபரங்கள், இது தொடர்பான பதிவுகள் செய்யப்பட

வேண்டிய முதன்மை பதிவேட்டின் நகல்கள் (01.01.2020 முதல் இன்று வரை) தகவலாக வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 27.12.2022 நாளிட்ட பிரிவு **19(1)**-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 31.01.2023 நாளிட்ட பிரிவு **19(3)**இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மேற்சொன்ன இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மனுதாரர் / மேல்முறையீட்டாளர் கோரிய இனங்களுக்கு உரிய தகவல்களை 25.06.2023ற்குள் வழங்குவதற்கு இறுதி வாய்ப்பு வழங்கி பொதுத் தகவல் அலுவலருக்கு 26.05.2023 தேதியிட்ட கடிதத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டது. அவ்விரண்டாம் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 27.02.2025 முற்பகல் கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களை ஏற்கனவே 17.02.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தால், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டதை இவ்வாணையம் உறுதி செய்து, ***இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது***.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA1923/F/2023**

**பொது அதிகார அமைப்பு**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
வட்டார வளர்ச்சி அலுவலகம்
கடலூர், கடலூர் மாவட்டம் - 607 001

**மனுதாரர்**

திரு. சு.வரதராஜன்,
28, காவல் நிலையம் தெரு,
ரெட்டிச்சாவடி (அஞ்சல்)
கடலூர் வட்டம், கடலூர் மாவட்டம் - 607 403

Copy to: Judgement File/ Spare.
JE / PA 04.03.2025